[2003 ஜனவரி 28

மகளிருக்கான காவல் நிலையங்கள் அதிகரிக்கின்றன. அதேபோன்று பெண்களுக்கான சுகாதார வளாகங்கள் கட்டப்படுகின்றன. அதேபோன்று மாவட்டந்தோறும் சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து உழைக்கும் பெண்களுக்கான விடுதி கட்டப்படவேண்டும் என்பதை கொள்கை அளவில் அரசு பரிசீலிக்குமா என்ற கேள்வியைக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையின்கீழ் மொத்தம் 8 அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் செயல்படுத்தப்படுகின்றன. தனியார் தொண்டு நிறுவனங்களால் 89 பணிபுரியும் மகளிர் இல்லங்கள் நடத்துவதற்கு மத்திய அரசு, தமிழக அரசின் உதவியோடு மானிய உதவி வழங்கியுள்ளது. அதைத்தவிர தொண்டு நிறுவனங்கள் அரசினுடைய அனுமதியைப் பெறாமல்கூட பல்வேறு பகுதிகளில், நகர்ப்புறங்களில் இதுபோன்ற விடுதிகளை நடத்திக் கொண்டிருக்கின்றன. எனவே உழைக்கும் மகளிரை மனதிலேகொண்டு—மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய யோசனை, நல்ல யோசனை—எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் இதற்குச் சம்மதிப்பார்களேயானால், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, இதை அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

13—

மாணவிகளுக்கு விடுதி

•20608—திரு. ப. பொன்னம்பலம்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஒன்றியம், சமயநல்லூர் தொகுதி, இளமனூரில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு தங்கும் விடுதி கட்டித் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2003 ஜனவரி 28]

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதியதாக மாணவ, மாணவியர் விடுதிகள் தொடங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ப. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் நல்லாட்சி நடைபெறுகிறது. தமிழகத்தில் வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்ற ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகளை எந்த ஆட்சியிலும் இல்லாத வகையில், சொந்தக் கட்டடங்களில் மாற்றி அமைப்பேன் என்று உறுதியளித்த அம்மா அவர்கள் அதைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை ஆதிதிராவிட மக்களும், மாணவ, மாணவிகளும் வாழ்த்துகிறார்கள். சமயநல்லூர் தொகுதியில் ஆதிதிராவிட மாணவர் இல்லங்கள் நிறைய உள்ளன. அதுபோல் பெண்களுக்கென்றே இளமனூர் ஆதிதிராவிடர் மாணவியர் பள்ளியிலும், சத்திரப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி, காஞ்சரம்பேட்டை, நல்லமணி மேல்நிலைப் பள்ளி, ஊமச்சிகுளம் உயர்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளை இணைத்து மாணவியர் விடுதி கட்டிக் கொடுக்க அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் சமயநல்லூர் தொகுதியில் 11 விடுதிகள் இருக்கின்றன. அதில் 8 விடுதிகள் அரசு சொந்தக் கட்டடங்களிலும், 3 விடுதிகள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. அந்த மூன்று விடுதிகளுக்கும் அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு இடத் தேர்வுகள் செய்யும் பணி தற்போது விரைவாக நடந்து வருகிறது. அதிலும் குறிப்பாக, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். நம்முடைய உறுப்பினர் அவர்கள், பெண்களுக்குப் புதிதாக விடுதிகளைத் தொடங்க

வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அம்மா அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற உடனேயே பெண்கள் கல்வியில் உயர வேண்டும் என்பதற்காக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ப்ளஸ் 1, ப்ளஸ் 2 படிக்கின்ற மாணவிகளுக்கு, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, புரட்சிகரமான திட்டத்தை, இலவசமாக மிதிவண்டி வழங்கும் திட்டத்தை அறிவிப்பு செய்து, இரண்டு ஆண்டுக்குள்—கடந்த ஆண்டு 56,525 மிதிவண்டிகளும், இந்த ஆண்டு 47,980 மிதிவண்டிகளும்—1,04,505 மிதிவண்டிகளை வழங்கியிருக்கிறார்கள். அதற்கான செலவு, ஏறக்குறைய 15 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. மாணவிகளுக்கு முதுநிலை பட்ட மேற்படிப்பு வரை இலவசமாக—மகளிருக்கு—கல்வி கற்றுக் கொடுக்க வேண்டும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதுபோல கல்லூரிகளில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு படிக்கின்ற மாணவ மாணவியர்களுக்கு, கல்விக் கடனை முழு மானியமாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, தமிழ்நாட்டில் முழு மானியமாக ஆக்க வேண்டுமென்று சொல்லி அதற்காக 5 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். இப்படி அள்ளி அள்ளிக் கொடுக்கிற வள்ளலின் வாரிசாக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு விளங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் கனிவோடு கவனத்தில் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

14—

பேருந்து வசதி

•6622—திரு. க. முருகவேல் ராஜன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, சத்தியவாடி கிராமத்திற்குப் பேருந்து வசதி இல்லை என்பதால் தடம் எண் 29 பேருந்து திண்டிவனத்தில் இருந்து சத்தியவாடி கிராமம் வழியாகச் சென்றுவர அரசு ஆவன செய்யுமா?